**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW7 |
| நாள் | : | 30.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அண்ணாமலை | ஜாதி | : | |
| தந்தை- பெயர் | : | அப்பாவு | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆர்.கே.பேட்-ல் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதவும் தெரியாது. போலிசார் கேட்டதற்கு இணங்க காவல் நிலையம் வைத்து கையொப்பம் செய்தேன். வேறு எதுவும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்னுடன் மோகன் என்பவர் கையெழுத்து செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.த.சா.ஆ.4** ஆகும். மேலும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.10.2021ம் தேதி மாலை சுமார் 6.45 மணிக்கு நானும், மோகனும், அம்மையார்குப்பம் ஆந்திர பேருந்து நிறுத்தம் உட்கார்ந்து பேசி கொண்டிருந்தோம் என்றும், அப்போது ஆர்.கே.பேட்டை போலிசார் ஒரு நபரை விசாரணை செய்து கொண்டிருந்தார் என்றும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதாகவும், அதற்கு எங்களை சாட்சியாக இருக்க போலிசார் கேட்டதற்கு

இணங்க நாங்கள் அதற்கு சம்மதம் தெரிவித்தோம், அப்போது எதிரி தனது மனைவியை 27.12.2021ம் தேதி காலை 9.30 மணிக்கு அய்யனேரி கிராமத்தில் உள்ள மனைவியின் டெய்லர் கடையில் வைத்து காய் வெட்ட பயன்படும் கத்தியால் வலது பக்க மார்பு, முழங்கை, வலது பக்க வயிற்றில் குத்தியதாகவும், தடுக்க வந்த அவர் மகன் சரவணனை தள்ளிவிட்டதாகவும், ஊர் ஜனங்கள் கூடவே தமிழ்மணி ஓடிவிட்டதாகவும், போலிசாரிடம் வாக்குமூலமாக கொடுத்தார் மேலும், கொலைக்கு பயன்படுத்திய கத்தியை முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன் பேரில் காலை 8.15 மணிக்கு எதிரியிடமிருந்து இரு சக்கர வாகனத்தையும் புதரில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் போலிசார் கைப்பற்றினார்கள். அதில் நானும், மோகனும், கையொப்பம் செய்தோம், போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.10.30 17:30:55 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 87/2024 |
| வழக்கு சாட்சி | : | PW8 |
| நாள் | : | 30.10.2025 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோகன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u> **:**

நான் தற்போது ஆர்.கே.பேட்–ல் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதவும் தெரியாது. போலிசார் கேட்டதற்கு இணங்க காவல் நிலையம் வைத்து கையொப்பம் செய்தேன். வேறு எதுவும் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்னுடன் அண்ணாமலை என்பவர் கையெழுத்து செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.த.சா.ஆ.7** ஆகும். மேலும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ.9** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.10.2021ம் தேதி மாலை சுமார் 6.45 மணிக்கு நானும், அண்ணாமலை என்பவரும் அம்மையார்குப்பம் ஆந்திர பேருந்து நிறுத்தம் உட்கார்ந்து பேசி கொண்டிருந்தோம் என்றும், அப்போது ஆர்.கே.பேட்டை போலிசார் ஒரு நபரை விசாரணை செய்து கொண்டிருந்தார் என்றும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதாகவும், அதற்கு எங்களை சாட்சியாக இருக்க

போலிசார் கேட்டதற்கு இணங்க நாங்கள் அதற்கு சம்மதம் தெரிவித்தோம், அப்போது எதிரி தனது மனைவியை 27.12.2021ம் தேதி காலை 9.30 மணிக்கு அய்யனேரி கிராமத்தில் உள்ள மனைவியின் டெய்லர் கடையில் வைத்து காய் வெட்ட பயன்படும் கத்தியால் வலது பக்க மார்பு, முழங்கை, வலது பக்க வயிற்றில் குத்தியதாகவும், தடுக்க வந்த அவர் மகன் சரவணனை தள்ளிவிட்டதாகவும், ஊர் ஜனங்கள் கூடவே தமிழ்மணி ஓடிவிட்டதாகவும், போலிசாரிடம் வாக்குமூலமாக கொடுத்தார் மேலும், கொலைக்கு பயன்படுத்திய கத்தியை முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாக கூறியதன் பேரில் காலை 8.15 மணிக்கு எதிரியிடமிருந்து இரு சக்கர வாகனத்தையும் புதரில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் போலிசார் கைப்பற்றினார்கள். அதில் நானும், அண்ணாலையும் கையொப்பம் செய்தோம், போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.10.30 17:31:02 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.